(ஆ) 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முதல்வர் சொன்னது குறித்து மத்திய அரசு மாநில அரசிடம் விளக்கம் கோரியிருப்பதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று சொன்னது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் கேட்கப்பட்டு நேற்றும் இன்றும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது குறித்து விவரம் கேட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது சம்பந்தமாக அரசின் சார்பில் விதி 82-இன்கீழ் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட தகவல் எதுவும் பேரவைத் தலைவருக்கு வரவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி, திரு. என். டென்னிஸ் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(2) கவன ஈர்ப்பு

கஞ்சம் ரெட்டியார்கள் உட்பட, மாநிலத்திலுள்ள ரெட்டியார்கள் சமூகத்தினரைப் பிற்பட்ட வகுப்பினராக அறிவிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி அவர்கள் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

T :)x§ SOWDI S. SUNDARABHARATHI : Sir, I wish to call the attention of the Hon. Minister for Backward Classes to a matter of urgent public importance, namely, the hardship experienced by the students of Reddi (Ganiam) community in Aruppukkottai taluk in getting community certificates to enable them to continue their studies and the necessity to declare the Reddi Community including the Reddis (Ganjam) of Ramanathapuram and other districts as Backward Community.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக விளங்கிய கஞ்சம் மாவட்டத்தில் வசித்துவந்த ஒரு குறிப்பிட்ட ரெட்டி வகுப்பைச்